**செய்தி வெளியீடு எண்.48/2018 நாள்:11 .9.2018**

## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் நுகர்வோர் மற்றும் வரி செலுத்துவோர்களுக்கு குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியையும், கட்டணங்களையும் 30.09.2018க்கு முன்பே செலுத்த கோரிக்கை

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் வரி செலுத்துவோர் மற்றும் நுகர்வோர் தங்களது குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வரியையும், குடிநீர் கட்டணங்களையும் 30.09.2018 க்கு முன்பே சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறது.

வரி மற்றும் கட்டணங்கள் செலுத்தத்தவறிய நுகர்வோர்களுடைய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பைத்துண்டிக்கவும் சென்னைக்குடிநீர் வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது. ஏற்கெனவே, வாரியம் வரி மற்றும் கட்டணங்கள் செலுத்த தவறிய வணிக பயன்பாட்டு நுகர்வோர்களின் குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பை நிபந்தனைக்குரிய அறிவிப்பை வழங்கிய பிறகு துண்டிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

நுகர்வோர்கள் வரி மற்றும் கட்டணத்தையும் சென்னைக் குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்திலும்/பகுதி அலுவலகங்களிலும் அல்லது பணிமனை வசூல் மையங்களிலும் செலுத்தலாம். மேலும், நுகர்வோர்கள் இணையதளத்தின் வாயிலாக வாரியத்தின் வலைதள முகவரி www.chennaimetrowater.tn.nic.in மூலமாகவும் பற்று / வரவு வங்கி அட்டை உபயோகப்படுத்தியும் செலுத்தலாம்.

காலதாமதமாக செலுத்தப்படும் கட்டணங்களுக்கு அபராதமாக மேல்வரி மாதம் 1.25 சதவீதம் நுகர்வோர்கள் செலுத்த நேரிடும்.

சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பபட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களும், குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள் செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேலும், குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு பெறாமல் இருந்தாலும் குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி செலுத்துதல் அவசியமாகும்.

எனவே, நுகர்வோர்கள் உரிய காலக்கெடுவுக்குள் கட்டணங்களையும், வரியையும் உடனடியாக செலுத்தி குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு துண்டிப்பு போன்ற வாரியத்தின் கடுமையான நடவடிக்கைகளை தவிர்க்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்